செ.வெ.எண் : 11 /ஜூன் நாள் : 07.06.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## தமிழ்நாடு அரசின் விலையில்லா பாடப்புத்தகம், விலையில்லா சீருடை வழங்கும் திட்டங்களின் கீழ், பள்ளி மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடைகளை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்

இராமநாதபுரம் மாவட்டத்தில் பள்ளி மாணவ மாணவியர்களுக்கான கோடை விடுமுறை நிறைவடைந்து, மாவட்டத்திலுள்ள அனைத்து பள்ளிகளும் இன்று (07.06.2017) முதல் மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. அதனடிப்படையில், பள்ளிகள் திறக்கப்படும் முதல் நாளான இன்றே, தமிழ்நாடு அரசு மாணவ, மாணவியர்களுக்காக செயல்படுத்தி வரும் விலையில்லா பாடப்புத்தகம், விலையில்லா சீருடை வழங்கும் திட்டங்களின் கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், இராமநாதபுரம் மாநகராட்சி வள்ளல் பாரி நடுநிலைப்பள்ளி, அரசு மீள்திறன் பயிற்சி (ELITE), மாநகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளைச் சார்ந்த மாணவ மாணவியர்களுக்கு விலையில்லா பாடப்புத்தகங்கள் மற்றும் சீருடைகளை வழங்கினார்.

மாவட்டத்தில் 67 அரசு மேல்நிலைப் பள்ளிகளும், 33 அரசு உதவி பெறும் மேல்நிலைப்பள்ளிகளும், 64 அரசு உயர்நிலைப் பள்ளிகளும், 21 அரசு உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகளும், 154 அரசு நடுநிலைப்பள்ளிகளும், 29 அரசு உதவி பெறும் நடுநிலைப்பள்ளிகளும், 758 அரசு தொடக்கப்பள்ளிகளும் , 161 அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளிகளும் செயல்பட்டு வருகின்றன. நடப்பு கல்வியாண்டில் மாவட்டத்தில் 89,000 மாணாக்கர்களுக்கு விலையில்லா பாடப்புத்தகங்களும், 37,000 மாணாக்கர்களுக்கு விலையில்லா சீருடைகளும் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் (பொ) திரு.பாலசுப்பிரமணியன், இராமநாதபுரம் மாவட்ட கல்வி அலுவலர் (பொ) திரு.முத்துசாமி, மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்கப்பள்ளி) திரு.சி.சந்திரசேகரன், மீள்திறன் பயிற்சி பள்ளி ஒருங்கிணைப்பாளர் திரு.நவநீத கிருஷ்ணன், தலைமையாசிரியர்கள் திருமதி.ஜெ.விசுவாசம், திருமதி.எஸ்தர் ராணி உள்பட அரசு அலுவலர்கள், மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**